**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.72
https://ngmtamil.in/

# குறிஞ்சிப்பாட்டில் அகப்பண்பாட்டு சிந்தனைகள்

**முனைவர் ப.உமாதேவி,**

கோயம்புத்தூர்.

**ஆய்வுச் சுருக்கம்**

பழந்தமிழர் வாழ்க்கையை அகம் புறம் என்று இருபகுப்பாக வாழ்ந்தனர். சங்க இலக்கியங்களான எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் அக்கால மக்களின் அகப்புறச் சிந்தனைகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் எடுத்துக்காட்டுகின்ற காலத்தால் அழியாத கல்வெட்டுகள் போன்று ஒளிர்விடுகின்றன. பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றான குறிஞ்சிப்பாட்டு பண்டைத்தமிழரின் அகவாழ்வினையும், உணர்வு சார்ந்த விழுமியங்களையும் வெளிப்படுத்துகிறது. நிலத்தைப் பண்படுத்தி நல்ல விளைச்சலைப் பெறுவது போல் மனிதனும் மனத்தினை பண்படுத்துவதும் மிகவும் இன்றியமையாததாகிறது. சங்க காலம் முதல் தற்காலம் வரை மனித வாழ்வில் முக்கியப் பங்காற்றுவது பண்பாட்டுச் சிந்தனைகளே ஆகும். அவ்வகையில் குறிஞ்சிப்பாட்டில் இடம்பெறும் அகப்பண்பாட்டுச் சிந்தனைகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

**திறவுச் சொற்கள்**

அகவாழ்வு, பண்பாடு, களவு, கற்பு, அறத்தோடு நிற்றல், இரவுக்குறி, அல்லகுறி, வரைவு.

**முன்னுரை**

சங்க இலக்கியங்களில் இல்லற செந்நெறிகள் பரந்து விரிந்து காணப்படுகின்றன. பத்துப் பொருத்தங்களுடன் எண்வகை மனத்தினுள் ஒன்றை மேற்கொண்டு வாழும் தலைவன் தலைவியின் அகப்பண்பாட்டுச் சிந்தனைக் கூறுகளை பகுத்தாய்வதற்கு இக்கட்டுரை வழிகோலுகிறது.

**இல்லறம்**

இல்லறம் என்னும் நல்லறத்திற்கு உறுதுணையாகவும் ஊன்றுகோலாகவும் அமைவது அன்பு என்னும் அடித்தளமாகும். மனத்தினில் தோன்றும் அன்பானது ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதிலும் விட்டுக் கொடுத்துச் செல்வதிலும் தன்னலமின்மையாலும் உறுதி பெற்று உருப்பெறுகிறது. ஆலமர விழுதுகள் போல உறவுகள் இணைகின்ற இடம் இல்லறம் எனப் பெயர் பெறுகின்றது. கடிகாரத்தில் இரு முட்கள் போன்று இல்லறத்தில் தலைவனும் தலைவியும் வாழ்கின்றனர். தனிமனித கட்டமைப்பின் முதன்மையான வளர்ச்சி நிலையாக இல்லற வாழ்வு அமைகின்றது. இல்லறத்தின் மேன்மை குறித்து வள்ளுவர்,

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது." (குறள் – 45, ப.எண்:16)

தமிழர்களின் அகவாழ்வு முறையில் குடிப்பெருமை, காதல், திருமணம் மக்கட்பேறு, குடும்பம் நடத்தும்போது கடைபிடிக்கக்கூடிய ஒழுகலாறுகள், பொருளீட்டுதல், ஈகை, சுற்றம் போற்றுதல், விருந்தோம்பல் ஆகிய கூறுகள் முக்கியப் பங்காற்றுகின்றன.

**பண்பாடு**

மனிதனின் அக வளர்ச்சியும் புற வளர்ச்சியும் பண்பாடு என்னும் சொல்லின் பொருளாக அமைகின்றது. இது சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உள்ளப்பாங்கின் வெளிப்பாடாகும். மக்களின் ஒழுக்க உயர்வு, அறிவின் மேம்பாடு, கொள்கை மற்றும் பண்பின் திருந்திய நிலையே பண்பாடாகும். மனிதன் தன்னுடைய வாழ்வில் பிறர் பழிக்காத வகையில் எவையெல்லாம் தனக்குத் தேவை, உயர்வானதென எவற்றையெல்லாம் கருதுகிறானோ அவற்றை பண்பாடு என்ற நிலையில் நோக்கப்படுகின்றது. "ஒருவன் தன் குணநலன்களை நிரப்புவதிலும் தன்னை சூழ்ந்த சமுதாயத்தின் நலன்களை பேணுவதிலும் பேராவாக் கொண்டிருக்கும் நிலை பண்பாடாகும் என்பார். மாத்யூ அர்னால்டு" (முனைவர் தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், பக்களண்:4)

மனித மனம் பக்குவப்படும் பொழுது கனிவும் இனிமையும் மிகுந்து உள்ளொளி பெருகுகின்றது. உயிர் தத்துவம் மிளிர்கின்றது. மனித வாழ்வு மேன்மை பெறுகின்றது. மனிதன் தான் படைக்கும் படைப்புகளுக்கு மட்டும் இலக்கணத்தையும் வரைமுறைகளையும் உருவாக்கவில்லை வாழும் வாழ்க்கைக்கும் அவற்றை உருவாக்கி இருக்கிறான். அதுவே பண்பாடாக ஒளிர்கின்றது.

**அறத்தோடு நிற்றல்**

தலைவிக்கு காதல் நோய் ஏற்பட்ட பொழுது அவளது மேனியில் பசலை நிறமும் நடத்தையில் மாற்றமும் தோன்றுகிறது. அதன் காரணத்தை அறிய செவிலித்தாயும் நற்றாயும் கவலையுற்று முருகனை வேண்டி தலைவி நலம்பெற வேண்டுமென வெறியாட்டு நிகழ்த்துவர். அவ்விடத்தில் இத்தீங்கிற்கு காரணம் முருகன் எனக் கூறுவார்கள். அப்போது தலைவியின் காதலை வெளிப்படுத்த வேண்டிய கடமையும் பொறுப்பும் தோழியைச் சாரும். அதனையே அறத்தோடு நிற்றல் என்று கூறுகின்றனர். தலைவியின் காதலை அதாவது களவு வாழ்க்கையைத் தோழி செவிலித்தாயிடம் எடுத்துக்கூறி திருமணத்திற்கு(வரைவு) வற்புறுத்துவாள். இந்நிகழ்வு கற்பு வாழ்க்கைக்கு அடித்தளமாகிறது. களவொழுக்கம் குறித்து தோழி செவிலித் தாய்க்கும், செவிலித்தாய் நற்றாய்க்கும், நற்றாய் உடன்பிறந்தோருக்கும் தந்தைக்கும் எடுத்துக் கூறுவாள். களவுப்புணர்ச்சியை வெளிப்படுத்தும் தோழி இரு முறைகளைக் கையாளுகிறாள்.

1. முன்னிலை மொழி - முன் நிற்பாருக்கு நேரே தன் உள்ளக்
கருத்துக்களை வெளிப்படுத்துதல்.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

2. முன்னிலைப் புறமொழி - முன் நிற்பாருக்கு கூற வேண்டிய செய்தியை பிறருக்கு கூறுவது போல தன் உள்ளக்கருத்துக்களை வெளிப்படுத்துதல்.

மகளின் உடல்நிலையைக் கண்ட தாய், தலைவிக்கு என்ன ஆயிற்று என்று வருத்தப்படுகிறாள். கட்டுவிச்சியை அழைத்து, தலைவியின் நிலைக்கு என்ன காரணம் என்று கேட்கிறாள். தலைவியின் நிலைக்குக் காரணம் தெய்வத்தால் வந்த குற்றம் என்று கட்டுவிச்சி கூறுகிறாள். அதைக் கேட்ட தோழி, "தலைவி குறிஞ்சி நிலத்தலைவனோடு காதல் கொண்டு பழகினாள், அவர்களின் காதல் வாழ்வு பற்றி அந்த மலையில் வாழும் குரங்குக்கு கூடத் தெரியும். அந்தக் குரங்கு பொய் சொல்லாது" என்று கூறித் தலைவியின் களவொழுக்கத்தை அவளுடைய தாயாருக்குத் தெரிவிக்கிறாள். தோழி அறத்தொடு நின்றாள் என்ற செய்தியை எடுத்துக்கூறும் குறிஞ்சித்திணையில் அமைந்த வெள்ளிவீதியார் பாடல்

"அரும்புஅற மலர்ந்த கருங்கால் வேங்கை
மேக்குஎழு பெருஞ்சினை இருந்த தோகை
பூக்கொய் மகளிரின் தோன்று நாடன்
தகாஅன் போலத் தான்தீது மொழியினும்,
தன்கண் கண்டது பொய்க்குவது அன்றே" (குறுந். பா- 26, ப.எ:50)

முத்து, மணி, பொன் போன்றவற்றால் செய்த அணிகலன்கள் தொலைந்து போனால் திரும்ப பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் சான்றாண்மை, ஒழுக்கம், பிறர் வியக்கத்தக்க பெருமை, நல்லியல்பு ஆகியன தொலைந்து போனால் திரும்பப் பெறுதல் இயலாது. அது போன்று தான் தலைவியின் நலனும் அமைந்துள்ளது. தலைவியின் உடல் வனப்பை தலைவன் கவர்ந்தான். இச்செய்தியை செவிலித்தாயிடம் சொன்னால் பழி ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்தினால் தலைவி தோழியிடம் கூறினாள். அது கேட்ட தோழி செவிலித்தாயிடம் இந்நிகழ்வை எடுத்துக் கூறி அறத்தோடு நிற்கிறாள்.

"இருவேம் ஆய்ந்த மன்றல் இதுவென
நாம்அறி வுறாலின் பழியும் உண்டோ?
ஆற்றின் வாரா ராயினும், ஆற்ற
ஏனைஉல கத்தும் இயைவதால் நமக்கென
மான்அமர் நோக்கம் கலங்கிக் கையற்று.." (பா.வரி:21-25, ப.எ:461)

குறிஞ்சிப்பாட்டில் தலைவியின் களவு வாழ்க்கை பற்றி தோழி கூறுகையில் அவளின் மனநிலையும் விளக்கப்படுகிறது. இருபெரும் வேந்தர்கள் தங்களுக்குள் இருந்த கருத்து வேறுபாட்டினால் போரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை ஒன்று சேர்க்க நினைக்கும் சான்றோர் எத்தகைய அச்சத்துடன் இருப்பார்களோ அத்தகைய அச்சத்துடன் இருந்துகொண்டு தோழியின் உள்ளம் தாங்கிக் கொள்ள முடியாத உண்மையைக் குறித்து செவிலித்தாயிடம் கூறி தலைவியின் நிலையை விளக்குகிறாள்.

”இகல்மீக் கடவும் இருபெரு வேந்தர்
வினையிடை நின்ற சான்றோர் போல,
இருபேர் அச்சமோடு யானும் ஆற்றலென்”(பா.வரி:27-29, ப.எ:462)

என்று கபிலர் தோழியின் மனதினிலுள்ள அச்சவுணர்வை வெளிப்படுத்துகிறார்.

**இயற்கைப் புணர்ச்சி**

சங்க இலக்கிய நூல்களில் களவு வாழ்க்கை பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. களவு வாழ்வின் முந்தைய நிலையாக இயற்கைப் புணர்ச்சி அமைகின்றது. முன்பு அறிமுகம் இல்லாத தலைவனும் தலைவியும் ஓரிடத்தில் எதிர்பாராத விதமாக சந்தித்து கூடி மகிழ்ந்து அன்பு காட்டுவது இயற்கைப் புணர்ச்சி எனப்படுகிறது. இந்நிகழ்வு தெய்வத்தாலோ தலைவியின் தனிப்பட்ட விருப்பத்தாலோ நிகழ்கின்றன. இது உள்ளப்புணர்ச்சி, மெய்யுறு புணர்ச்சி என இரு நிலைகளில் காணப்படுகிறது.

இயற்கைப் புணர்ச்சி விரிவுகள்

| தெய்வத்தால் நிகழ்வது | தலைவியால் நிகழ்வது |
|---|---|
| கலந்து மகிழ்தல் | தலைவிக்கு தலைவன் தன் வேட்கையை உணர்த்துதல் |
| அழகினைப் பாராட்டல் | தலைவனது வேட்கையைத் தலைவி முதலில் மறுத்தல் |
| தேர்வு செய்த அணிகலன்களை தலைவி பின்னர் ஏற்று | தலைவனது வேட்கையைத் அணிதல் உடன்படுதல் |
| | அதன்பின் தலைவனும் தலைவியும் கூடி மகிழ்தல் |

களவு நெறி குறித்து தொல்காப்பியர்

”இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்போடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூட்டம் காணுங் காலை
மறையோ தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே” (தொல்.நூ:89, ப.எ:156)

குறிஞ்சிப்பாட்டில் இடம்பெற்றுள்ள தலைவனும் தலைவியும் முதல் சந்திப்பிலேயே மெய்யுறு புணர்ச்சி மேற்கொள்கின்றனர். இந்நிகழ்ச்சி இருவரின் களவு வாழ்க்கைக்கு அடித்தளமிடுகிறது. இயற்கைப்புணர்ச்சி மூன்று வகையான சூழலில் நடைபெறுகிறது.

1. பூத்தரு புணர்ச்சி - தலைமகன் தலைவியின் கூந்தலில் மலர்க்கொத்தைச் சூட அவள் அவனை மனதளவில் முடிவு செய்தல்.

2. புனல் தரு புணர்ச்சி - தலைவி ஆற்று வெள்ளத்தில் மகிழ்ந்து நீராட அப்போது நிகழ்ந்த இடையூற்றிலிருந்து மீட்ட தலைவனை தனக்குரியவனாக தேர்ந்தெடுத்தல்.

3. களிறு தரு புணர்ச்சி - தலைவி தினைப்புனம் காவல் புரிந்த காலத்தில் களிறு ஒன்றின் தாக்குதலில் இருந்து தன்னை காப்பாற்றிய ஆடவனையே தனக்குரிய காதல் தலைவனாக தெரிவு செய்தல்

குறிஞ்சிப்பாட்டில் தினைப்புனம் காக்க சென்ற தலைவியும் தோழியும் புனலில் நீராடி விட்டு தொண்ணூற்றியொன்பது மலர்களைச் சேகரித்து அவற்றைச் சூடி மகிழும் பொழுது எதிர்பட்ட தலைவன் அங்கு வந்த களிறுவிடம் இருந்து தலைவியைக் காப்பாற்றியதால் இவர்களின் முதல் சந்திப்பு களிறுதரு புணர்ச்சிக்குரிய சூழலை ஏற்படுத்துகிறது. களிறுக்கு பயந்து புனலில் குதித்து பயத்தில் நடுங்கி நின்ற தலைவியை கரைக்கு கொண்டு வந்த தலைவன் அவளின் அழகை நுகர்வதாக கூறுகிறான்.

" திணிநிலைக் கடம்பின் திறள்அரை வளைஇய,
துணையறை மாலையின் கைபிணி விடேஎம்,
நுரையுடைக் கலுழி பாய்தலின், உரவுத்திரை
அடும்கரை வாழையின் நடுங்கப் பெருந்தகை "(பா.வ:176-179,
ப.எ:477) **உறுதிமொழி தந்து ஆற்றுவித்தல்**

தலைவன் தலைவி இடையே நடைபெறும் சந்திப்பின்போது உருவாகும் அன்பின் பிணைப்பு உறுதியானது. எத்தனை பிறவிகள் எடுத்தாலும் தலைவனே தனக்கு கணவனாக வரவேண்டும் என்பது தலைவியின் எதிர்பார்ப்பாக நீள்கிறது. தலைவி தன் கணவனின் மனதில் குடியிருக்க வேண்டும். அதாவது அவள் அவனின் நெஞ்சை நேர்பவளாக இருக்க வேண்டும் என எண்ணுகிறாள். தலைவனும் தலைவியின் பிரிவை ஏற்க மனம் இல்லாதவனாக வாழ்கிறான். தலைவி தலைவன் தன்னை விட்டு பிரிந்து விடுவானோ என்ற அச்சத்தினால் உழல்வதைக் கண்ட தலைவன் இருவரின் உறவின் ஆழத்தை எடுத்துக்கூறி தலைவியை ஆற்றுப்படுத்துகிறான். இதனை எடுத்துக்காட்டும் குறுந்தொகை பாடல்

"யாயும் ஞாயும் யாரா கியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர் ?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே." (குறுந்.பா- 40, ப.எ: 65)

தலைவனின் தாயும் தலைவியின் தாயும் இதற்கு முன் யாராக இருந்தார்களோ அதே போன்று அவர்களுடைய தந்தைக்கிடையே இருந்த உறவும் என்ன? இதற்கு முன் தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் சந்தித்ததும் இல்லை இருந்த பொழுதும் அவர்களின் முதல் சந்திப்பின்போது உண்டான அன்பு செம்மண் நிலத்தில் கலந்த மழைத்துளி போன்று பிரிக்க இயலாதவாறு கலந்து விட்டது என்று கூறி தலைவியின் அச்சத்தை தலைவன் போக்குகிறான்.

குறிஞ்சிப்பாட்டில் மெய்யுறு புணர்ச்சி நடந்த பின்பு தலைவியின் அச்சத்தைப் போக்கும் வகையில் தலைவன் உறுதிமொழி தந்து ஆற்றுவிக்கிறான்.

" ……………………………………………பிறங்குமலை

மீ மிசைக் கடவுள் வாழ்த்திக் கைதொழுது

ஏமுறு வஞ்சினம் வாய்மையின் தேற்றி.."(பா.வரி:208-210,ப.எ: 481)

**தலைவன் வரும் வழியின் இயல்பு**

தலைவன் தலைவியின் மீதுயர்ந்த அன்பினால் அவளை காண வேண்டும் என்ற ஆவலின் உந்துதலால் காலம் பாராமல் எதிர்வரும் துன்பத்தைக் கண்டு அஞ்சாமல் அவளை சந்திக்க வருவான் அப்படி வரும்பொழுது தலைவனுக்கு ஏதாவது துன்பம் நேர்ந்துவிடுமோ அல்லது அவனின் உயிருக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று தலைவி அஞ்சுவாள். இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த பின் தலைவியும் தலைவனும் சந்திப்பதற்காக இடத்தை தேர்வு செய்கின்றனர். இந்த இடத்திற்கு குறி என்று பெயர். இவர்களின் சந்திப்பு பகல் நேரத்திலும் இரவு நேரத்திலும் நிகழும். பகற்பொழுதில் காவலின் காரணமாக தலைவி வெளியில் வர இயலாத சூழலில் இரவுக் குறியில் சந்திப்பர். இரவுக்குறியில் சந்திப்பதற்கு இடையூறாக நாய் குரைத்தல், நிலா வெளிப்படுதல், தாய் விழித்திருத்தல், காவல் மிகுதி போன்றவை ஏற்படும். இத்தகு சந்திப்பு நிகழாத நிலையை அல்ல குறி என்பர். தலைவன் தலைவியை சந்திக்க வரும்பொழுது பல்வேறு இன்னல்களைக் கடந்து வந்த பொழுதும் தலைவியை சந்திக்க இயலாத நிலையை எண்ணி மனம் வருந்துவான். இத்தகைய நிகழ்வினை அகநானூற்று பாடல் எடுத்துக்காட்டுகிறது.

" மாய்கதில்- வாழிய நெஞ்சே! நாளும்,

மெல்இயர் குறுமகள் நல்அகம் நசைஇ,

அரவுஇயல் தேரும் அஞ்சவரு சிறுநெறி,

இரவின் எய்தியும் பெறாஅய் அருள்வரப்

புல்லென் கண்ணை புலம்புகொண்டு, உலகத்து

உள்ளோர்க்கு எல்லாம் பெருநகை யாக,

காமம் கைம்மிக உறுதர,

ஆனா அரும்படர் தலைத்தந் தோயே! . ." (அகம்.258,8-15, ப.எ:636)

என்று தன் நெஞ்சினை பழித்து கூறுவதாக பாடல் அமைந்துள்ளது. குறிஞ்சிப்பாட்டில் தலைவன் இரவு சந்திக்க வரும்பொழுது அல்லகுறி நிகழும் அப்பொழுது அவன் சினம் கொள்ளாதவனாக இருந்தான். தலைவன் தலைவியை சந்திக்க வரும் பொழுது வழியின் இயல்புகளை எண்ணி தலைவி வருந்துகிறாள். அவன் வீரம் மிக்கவனாக இருந்த பொழுதும் இடி, பேய், இரை தேடும் மலைப்பாம்பு, நீர்க்குழிகள், நீர்ச்சுழிகள் அவற்றில் இரை தேடும் முதலை போன்றவற்றால் தலைவனின் உயிருக்கு ஆபத்து வந்தால் தன் நிலை குறித்து கலங்குகின்றாள். தலைவன் வரும் வழியின் இயல்புகளாக கபிலர்

" நூலிலும், இழுக்கும், ஊழ்அடி முட்டமும்,

பழுவும், பாந்தளும் உளப்படப் பிறவும்,

வழுவின் வழா விழுமம், அவர்

குழுமலை விடரகம் உடையவால் எனவே"(பா.வரி:258-261,ப.எ:486) தலைவன் வரும் வழியில் வழிப்பறி செய்பவர் பதுங்கும் இடம், வழுக்கு நிலம், கால் போன போக்கில் சென்று வழியின்றி முட்டிக் கொள்ளும் இடங்கள், பேய், மழை, பாம்பு போன்றவை உளப்பட பிறவற்றால் ஏற்படும் துன்பங்களும் அவ்வழியில் மலை பிளந்து இருக்கும் பாதைகளும் உள்ளதை நினைத்து தலைவி வருந்துகிறாள்.

**முடிவுரை**

குறிஞ்சிப்பாட்டு பழந்தமிழரின் அகப்பொருள் சிந்தனை, தலைவியின் கற்பு நெறி, தலைவியின் காதல் உணர்வுகளை வெளிப்படுத்தும் தோழியின் அன்பு, தலைவனின் வீரம், மனப்பக்குவம்,செவிலித்தாய் மற்றும் நற்றாயின் கவலை ஆகியவற்றை எடுத்துக் கூறும் அகப்பொருள் இலக்கியமாகத் திகழ்கிறது. குறிஞ்சித் திணையின் உரிப்பொருளையும் மலையின் சிறப்புகளையும் தலைவியின் மன உணர்வுகளையும் இணைத்து களவு வாழ்வியலை கற்பு வாழ்வியலாக உருமாற்றம் அடையச் செய்யும் விதம் இந்நூலில் போற்றுதற்கு உரியது.

**துணைநூற் பட்டியல்**

[1.] **நடராசன், பி. ரா.** *சங்க இலக்கியம் பத்துப்பாட்டு*. திருமகள் நிலையம், 2014.

[2.] **புலியூர்க்கேசிகன்.** *அகநானூறு*. கங்கை புத்தக நிலையம், 2018.

[3.] **புலியூர்க்கேசிகன்.** *குறுந்தொகை*. பாரி நிலையம், 1965.

[4.] **தட்சிணாமூர்த்தி, அ.** *தமிழர் நாகரிகமும் பண்பாடும்*. ஐந்திணைப் பதிப்பகம், 2023.

[5.] **நாராயணவேலுப்பிள்ளை, எம்.** *திருக்குறள்: மூலமும் உரையும்*. நர்மதா பதிப்பகம், 2014.

[6.] **கௌமாரீஸ்வரி, எஸ்.,** பதிப்பாசிரியர். *தொல்காப்பியம் பொருளதிகாரம்*. சாரதா பதிப்பகம், 2016.